21st December 1956] [Sri M. Kalyanasundaram]

குறிப்பிட்டிருக்கிறது. அந்த மசோதா இன்றைக்கு கெஜெட்டில் பிரசுரிக்கப்படும். பிரசுரமானதற்குப் பிற்பாடு என்னுடைய அவா என்னவென்றால் இந்தச் சட்ட சபையானது கடைசியாகச் செய்யக் கூடிய ஒரு காரியமாக அதை எடுத்துக்கொண்டு அந்த மசோதாவை இந்தக் கூட்டத்திலேயே நிறை வேற்றிவிட வேண்டும் என்பது தான். அதை எல்லா அங்கத்தினர்களும் வற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். (பலத்த வரவேற்பு ஆரவாரம்.) ஆகையால் மற்ற எல்லாக் காரியங்களையும் முடித்துவிட்டு இந்த மசோதாவை இந்தச் சபையில் எடுத்துக் கொண்டு விவாதித்து நிறைவேற்றி விட முடியும் என்று நினைக்கிறேன்.

(Some hon. Members stood up in their places.)

DEPUTY SPEAKER: I cannot allow a discussion on this matter. The Hon. Minister has already given the information.

(2) FRAMING OF RULES UNDER THE MADRAS CULTIVATING TENANTS (PAYMENT OF FAIR RENT) ACT 1956.

SRI M. KALYANASUNDARAM: இன்னொரு விஷயம், நமது ரெவினியூ அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். இந்தச் சபை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றும், நேற்றும் தான் அவர் சபையில் இருக்கிறார். அவர் முதலில் இருந்து சபைக்கு வந்திருந்தால் இங்கே நடந்த பொது விவாதத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் தெரிந்து கொண்டிருக்கலாம். நாம் விவசாய விஷயத்தில் இரண்டு சட்டங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். குத்தகை விவசாயிகளின் வாரச் சட்டம் பாஸாகியிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்தைத் தொடர்ந்து வெளியிடப்படவேண்டிய விதிகளை எல்லாம் வெளியிடாமல் இருப்பதனால் கிராமங்களில் பெருத்த கிளர்ச்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. நாம் என்ன பலனை குத்தகைதாரர்கள் அடையவேண்டுமென்று நினைத்தோமோ அதை அவர்கள் அடையவில்லை. எந்த பாரத்தில் எழுதவேண்டும் என்பன போன்ற விதிகளை எப்பொழுது ஏற்படுத்தப்போகிறார்கள் என்பதை அவர்கள் விளக்க வேண்டும். அது எல்லாம் புதிராக இருக்கிறது.

THE HON. SRI M.A. MANICKAVELU: நியாய வார மசோதா விஷயமாக தகராறு ஏதாவது வந்தால் அதை விசாரிப்பதற்கு ஜில்லா முன்சீப்புக்கு அதிகாரம் வழங்கி இருக்கிறது. இந்த விதிகளை கொண்டுவருவதற்கு முன் ஹைக்கோர்ட்டை கலக்கவேண்டியிருக்கிறது. ஹைகோர்ட்டை கேட்டு இருக்கிறோம். நேற்று கூட அதைப் பற்றி ஞாபகப்படுத்தியிருக்கிறோம். கூடிய சீக்கிரத்திலேயே எல்லாவற்றையும் தயாரித்து தக்கந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

SRI M. KALYANASUNDARAM: (On a point of clarification, Sir) இந்த விதிகளை வெளியிட்டு அவைகளை சட்ட சபை முன்பு வைத்து, சபையின் அபிப்பிராயத்தை தெரிந்துகொள்ளவேண்டும். இந்தக் கூட்டம் முடிவதற்குள் விதிகளைக்கொண்டு வராவிட்டால், அவைகளைப்பற்றி அபிப்பிராயம் சொல்லுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். அதற்காகவே தான் சர்க்கார் தாமதம் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்த மாதிரி மனப்பான்மை எனக்குக் கிடையவே கிடையாது. (சிரிப்பு.)

(3) NAMING OF THE STATE AS TAMIL NADU.

(Some hon. Members were seen standing in their seats.)

DEPUTY SPEAKER: This is no question time.

SRI K. VINAYAKAM: (On a point of information, Sir) கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் ஆட்சி மொழி ஆவதைப்பற்றி வெளியிட்ட கருத்து வரவேற்க கூடியதே. தமிழ் மொழியை ஆட்சி மொழி ஆக்கவேண்டுமென்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வற்புறுத்தி

[21st December 1956

இருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் எதிர்க் கட்சி எதைச் செய்யுங்கள் என்று சொன்னாலும், சர்க்கார் அதைச் செய்யமாட்டார்கள். அவர்களாகவே விரும்பி அவர்களுக்கு தோன்றிய பொழுது தான் செய்வது என்பது வழக்கமாகிவிட்டது. இந்தச் சமயத்தில் ஒரு விஷயததை ஞாபக மூட்ட விரும்புகிறேன். அது தேர்தலின் போது ஆட்சியாளருக்கும் சரி, எதிர்க் கட்சியினருக்கும் சரி, பயன்படும். நாங்கள் தமிழ் நாடு என்று இந்த ராஜ்யத்துக்கு பெயரிடவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். எங்களுடைய வற்புறுத்தலை வேண்டுமானாலும் இப்பொழுது குறைத்துக் கொள்ளுகிறோம். சர்க்காராகவே, "தமிழ் நாடு" என்று பெயர் வைக்க ஒரு திருத்தம் கொண்டு வந்து, அதை மத்திய அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(4) SWAYAMARIATHAI MARRIAGE BILL.

Sri P. RANGASWAMI REDDIAR: (On a point of information, Sir) சில மாதங்களுக்கு முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் சுயமரியாதை திருமணங்களையும், மற்றும் சில திருமணங்களையும் செல்லுபடி ஆக்குவதற்காக ஒரு மசோதா கொண்டு வருவதாக உறுதி அளித்தார்கள். அந்த மாதிரி ஒரு மசோதா தயாரிக்கப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: அது பரிசீலனையிலிருக்கிறது. இந்தக் கூட்டத்தில் அதை எடுத்துக்கொள்வதற்கு அவகாசமிருக்குமா வென்று சொல்ல முடியாது.

III.—GOVERNMENT MOTION.

MOTOIN UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES *re* CHANGE IN THE ORDER OF VOTING ON DEMANDS FOR ADVANCE GRANTS FOR THE YEAR 1957–58.

The Hon. Sri C. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Demands for Advance Grants for the year 1957–58 be taken up in the order set out below :—

1. XXIII—Labour including Factories.
2. VII—General Sales Tax and Other Taxes and Duties Administration.
3. IX—Heads of States, Ministers and Headquarters Staff.
   XI—District Administration and Miscellaneous.
4. XXII—Harijan Uplift.
5. XII.—Administration of Justice.
   XIII—Jails.
   XIV—Police.
6. IV—Forest Department.
   XVIII—Agriculture and Fisheries.
   XIX—Veterinary.
7. XXIV—Civil Works—Works.
   XXV—Civil Works—Establishment and Tools and Plant.